## டி.எம்.எஸ்-சென்ட்ரல் இடையே

# பாதுகாப்பு ஆணையர் 2வது நாளாக ஆய்வு

**இன்றுடன் ஆய்வு முடிகிறது**




▶ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மனோகரன் மெட்ரோ ரயில் பாதையை ஆய்வு செய்கிறார்.

சென்னை, ஜன. 21: மெட்ரோ ரயில் முதல் வழித்தட திட்டத்தின் இறுதி கட்டமான டி.எம். எஸ் முதல் வண்ணாரப் பேட்டை இடையிலான வழித்தடத்தில் 2வது நாளாக நேற்று ரயில்வே முதன்மை பாதுகாப்பு ஆணையர் மனோகரன் ஆய்வு செய்தார்.

முதல் வழித்தட திட்டத்தின் இறுதி பணிகள் டி.எம். எஸ் முதல் வண்ணாரப் பேட்டை இடையிலான 10 கி.மீட்டர் தூரத்திற்கு சுரங்க வழித்தடத்தில் நடைபெற்று முடிந்தது. பின்னர், இஞ்சின் மூலம் சோதனை ஓட்டங்கள் மட்டுமே நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், மெட்ரோ ரயில்வே முதன்மை பாதுகாப்பு ஆணையர் மனோகரன் தலைமையிலான குழு நேற்று முன்தினம் வண்ணாரப்பேட்டையில் இருந்து தன்னுடைய ஆய்வை தொடங்கியது. முதல் நாளில் மெட்ரோ ரயில் நிலையத்தின் உட்புற, வெளிப்புற பாதுகாப்பு அம்சங்கள் சிக்னல்கள் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சுரங்கவழித்தடத்தில் டிராலி மூலமாக இரவு 10 மணி வரையில் ஆய்வு நடைபெற்றது.

இதைதொடர்ந்து 2வது நாள் ஆய்வு நேற்று காலை 8 மணியளவில் சென்ட்ரலில்இருந்துதொடங்கியது. அப்போது, சென்ட்ரலில் இருந்து அரசினர் தோட்டம், எல்.ஐ.சி, ஆயிரம் விளக்கு வழியாக டி.எம். எஸ் வரையில் டிராலி மூலம் நேற்று இரவு வரையில் ஆய்வு நடைபெற்றது.

உள்பகுதிகளில் பேட்டரி கார் மூலம் ஆய்வு செய்தார். 2வது நாள் ஆய்வை தொடர்ந்து இன்று மூன்றாவது நாளாக ஆய்வு நடைபெற உள்ளது. இன்று இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரையில் மெட்ரோ ரயிலை அதன் 80 கி.மீட்டர் வேகத்தில் இயக்கி பாதுகாப்பு ஆணையர் சோதனையிட உள்ளார். இதேபோல், இன்றுடன் மூன்று நாள் ஆய்வு முடிவடைகிறது.

இவரின் ஒப்புதழுக்கு பிறகு இந்த மாத இறுதியில் இந்த வழித்தடத்தில் சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் தயாராக உள்ளது.